**செய்தி வெளியீடு எண். 776** **நாள். 20.9.2008**

# செய்தி வெளியீடு

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் செயல்பாடுகள் கண்காணிப்புக் குழு –
ஊரகத் தொழில் துறை அமைச்சர் தலைமையில் முதல் கூட்டம் 25.9.2008 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெறும்.

---

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கென தனிக் கொள்கை 2008, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்பாட்டில் இருந்து வருகிறது.

இந்த தொழில் கொள்கையில் திட்டங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை செயலாளர், தொழில் துறை, நிதித்துறை மற்றும் வணிக வரித் துறை செயலர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள், வணிக வரித் துறை ஆணையர், சிட்கோ நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றின் மேலாண் இயக்குநர்கள், தமிழ்நாடு மின்வாரியத்தின் (பகிர்மானம்) பிரதிநிதி ஆகியோரை உறுப்பினர்களாகவும், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர் அவர்களை அமைப்பாளராகவும் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டது.

இந்தக் கொள்கைத் திட்டத்தில் முதலீட்டு மானியங்கள், மின்மானியங்கள், பின்முனை வட்டி மானியங்கள், முத்திரைத்தாள் கட்டண சலுகைகள் போன்ற பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. அண்மையில், முதலீட்டு மானியமாக ரூ.15 கோடியினை தொழில் முனைவோர்களின் நலன் கருதி அவர்களுக்கு வழங்குவதற்காக அரசு விடுவித்துள்ளது.

இந்தக் கண்காணிப்புக் குழு, தொழிற் பேட்டைகளில் மின்சாரம், குடிநீர், மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள ஒற்றைச் சாளரக் குழுவின் செயல்பாடுகள், தொழில் முனைவோர்களின் வசதியாக்க மன்றங்கள் மற்றும் தனிக்கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் போன்றவற்றை கண்காணித்து தகுந்த அறிவுரை வழங்கும்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு பொங்கலூர் நா. பழனிச்சாமி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த கண்காணிப்புக் குழுவின் முதல் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் 25.9.2008 அன்று நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்புகள் தொடர்பாக செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களையும், பயன்களையும், கருத்துகளையும் ஆய்வு செய்ய உள்ளது.

---

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9